ஒதுக்கப்படுகிற அடிப்படையில்தான் பரவலாக நிறைவேற்ற முடியும். இந்த ஒன்றியத்திற்கு ஏறத்தாழ 38 கிராமங்களுக்குத் தண்ணீர் வழங்க வேண்டும் என்ற கருத்துக்கு ஏற்றவாறு மத்திய அரசின் இசைவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

மானாமதுரை ஒன்றியத்தில் குடிநீர் வழங்குத் திட்டங்கள்

*189 வினா—திரு. த. சோனையா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், மானாமதுரை ஊராட்சி ஒன்றியத்தில் குடிதண்ணீர் வாரியத்தின் மூலமாக 1972-73, 1973-74 ஆகிய வருடங்களுக்கு எத்தனை கிராமங்களுக்குக் குடிதண்ணீர் வழங்கப்பட்டு அல்லது வழங்கப்பட உள்ளது ?

(இ) அதன் மொத்த மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) வருகிற ஆண்டு நிதிநிலைமை இடம் தருதவற்கேற்ப, மத்திய அரசு இசைவு தருவதற்கேற்ப இத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. த. சோனையா : மானாமதுரை ஒன்றியத்திற்கு குடிதண்ணீருக்காக ஒதுக்கப்படுகிற பணம் ஒரு கிராமத்துதிற்குச் கூட போதுமானதாக இல்லை. எனவே ஒன்றியத்தின்மூலம் அந்தமாதிரி வேலைகளைப் பூர்த்தி செய்துவிட முடியாது. ஆகவே மத்திய அரசிடம் போய் குடிதண்ணீர் திட்டத்திற்காக தனியாகப் பெற்று வேண்டியதைச் செய்ய நமது அரசு அவர்களை வேண்டிக் கேட்டு உடனடியாக குடிதண்ணீர் திட்டத்திற்கு ஏற்பாடுகள் செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அதைத்தான் நான் முன்னாலே குறிப்பிட்டேன். பெரும் அளவு கடன் உதவி, நிதி உதவி என்ற அடிப்படையில் அந்தத் திட்டங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இப்படிப்பட்ட நிதி உதவி வழங்குவதற்காக ஆயுள் காப்பீட்டுக் கழகம் போன்றவற்றின் கொள்கையில் மாற்றம் இப்போது ஏற்பட்டு இருக்கிறது. $3\frac{3}{4}$ கோடி ரூபாய் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டதற்குப் பிறகு $1\frac{3}{4}$ கோடி அளவுக்கு மத்திய அரசு இசைவு தந்து இருக்கிறார்கள். தொடர்ந்து திட்டங்கள் நிறைவேற்ற, நிறைவேற்ற மத்திய அரசு பணம் ஒதுக்குகிறார்கள். இத்திட்டத்தை "ஆக்சிலரேட்டட் ப்ரோக்கிராம்" அடிப்படையில் நிறைவேற்ற முடியும். ஆனால் சில திட்டங்கள் குடி நீர் வாரியத்தின் மூலமாக—அதாவது ஆழக் குழாய் கிணறு அமைப்பது போன்றவற்றிற்கு—எந்த கிராமத்திற்கு எந்த அடிப்படையில் பயன்படுமோ அந்த அடிப்படையில் நிறைவேற்ற, அதை அந்த ஊராட்சித் துறையின் ஒத்துழைப்போடு நிறைவேற்ற, முயற்சிக்கலாம் என்று நான் நம்புகிறேன்.

1974 சனவரி 28]

திரு. த.சோனேயா : தலைவரவர்களே, கிராமத்தில் இருக்கும் பஞ்சாயத்து வருமானத்தை வைத்து, எங்கேயாவது கடன் வாங்கி அந்தக் குடிநீர் திட்டங்களை நிறைவேற்றலாம் என்று பார்த்தால் பஞ்சாயத்துக்களின் வருமானம் குறைவாக இருக்கிறது. அதனுல் அதைச் சமாளிக்க சிரமமாக இருக்கிறது. ஆகவே, அரசாங்கமே முழுப் பொறுப்பு எடுத்து குடிநீர் வழங்குவதற்காவது ஆவன செய்யயுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, நிதி வசதி பெருகுவதற்கான வாயில்கள் காணப்பட்டால், அந்த வசதிகளை வைத்துக் கொண்டு அந்தக் காரியங்களைப் பரவலாக நிறைவேற்ற முடியும்.

கள்ளர் சீரமைப்பின் கீழ் இயங்கும் பள்ளித் தலைமை ஆசிரியர்களது ஊதியம்

*190 வினு—திரு. நா. வெ. குருசாமி : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில், நடுநிலைப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்களாக உள்ள செகன்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு புதிய சம்பள விகிதம் தரப்படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) இல்லை.

கள்ளர் சீரமைப்புபின் கீழ் இயங்கிவரும் நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களாக பணி புரியும் செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு புதிய சம்பள விகிதம் ஆகஸ்டு 1973-லிருந்து வழங்கப்பட்டு வருகிறது.

(இ) கேள்விக்கு இடமில்லை.

கடல் அரிப்புத் தடுப்பு நடவடிக்கைகள்

*191 வினு—திரு. த. சோனேயா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :

தனுஷ்கோடிப் பகுதியில் மிகுதியிருக்கும் கரையைச் சிறுக சிறுக கடல் அரிப்பதைத் தடுப்பதற்கு அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தனுஷ்கோடி பகுதியில் கடல் அரிப்பு தடுப்பு நடவடிக்கைகள் பற்றிய புள்ளி விவரங்களைத் திரட்டி விரிவாக ஆய்வு நடத்துகிற சிறப்புப் பணியாளர்களை நியமிக்க ஒப்புதல் அளிக்கும் செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையிலுள்ளன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS